

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 233 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 21 – சனிக்கிழமை 04 ஏப்ரல் 2026 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 233 : Thiruvalluvar Year - 2057 - Panguni 21 - Saturday 04 April 2026 - Kovai ★★ 12 Pages ₹ 5.00


## பத்தோடு பதினொன்று, அத்தோடு இது ஒன்று என எவராலும் அலட்சியப்படுத்த இயலாத

## ஈரோடு - சித்தோடு பரப்புரையில் திரண்ட மக்கள் கடல்!



### ‘நீட்’ துரோகம் – ‘மெட்ரோ’ ரயில் துரோகம் என – துரோகங்களின் முழு உருவமான

# என்.டி.ஏ. துரோகக் கூட்டணியை மக்கள் தூக்கி எறிவார்கள்!

## ஈரோடு – சித்தோட்டில் மக்கள் வெள்ளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அனல் பறக்கும் பிரச்சாரம்!

ஈரோடு, ஏப். 4-

**ஈரோடு - சித்தோட்டில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற மாபெரும் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் போது “ ‘நீட்’ துரோகம், ‘மெட்ரோ’ ரயில் துரோகம், என துரோகங்களின் முழு உருவ மாகத் திகழும் என்.டி.ஏ.துரோகக் கூட்டணியை மக்கள் தூக்கி எறிவார்கள்” என்று உறுதி படக் கூறினார்.**

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் காலை (02-04-2026) ஈரோட்டில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து ஆற்றிய உரை வருமாறு:-**

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பிறந்த மண்ணில் நின்று, தமிழ்நாட்டிற்கு புதிய விடியலைத் தந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவு கேட்டு நான் இங்கே வந்திருக்கிறேன்.

இது, பெரியார் பிறந்த ஊர் மட்டுமல்ல; பேரறிஞர் அண்ணாவும் - முத்தமிழறிஞர் கலைஞரும் வாழ்ந்து வளர்ந்த ஊர், இந்த ஈரோடு! பெரியார் இல்லை என்றால் அண்ணா இல்லை! அண்ணா இல்லை என்றால் கலைஞர் இல்லை! கலைஞர் இல்லை என்றால் நாம் எல்லாம் இல்லை! அந்த வகையில், அனைத்திற்கும் தொடக்கமாக விளங்கும் திராவிடப் பேரூர்தான், இந்த ஈரோடு!

திராவிடப் பேரூரில் நின்று நான் கேட்கிறேன்… மீண்டும் திராவிட மாடல் ஆட்சிக்குத் தயாரா? தயார் (மக்கள்). மகிழ்ச்சி! அதற்காகத்தான், இந்த மாவட்ட வேட்பாளர்கள் இங்கே உங்கள் முன்னால் நின்று கொண்டிருகிறார்கள்.



### 9 வேட்பாளர்களையும் வெற்றி பெறச் செய்வீர்!

ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதியில் நமது வெற்றி வேட்பாளர் மாவட்டக் கழகத்தின் செயலாளர் -அமைச்சர் - நம்முடைய அன்புச் சகோதரர் சு. முத்துசாமி நிற்கிறார். மிக நீண்ட அரசியல் அனுபவம் கொண்டவர். அமைதியாகப் பேசி எதையும் சாதிக்கக் கூடியவர். அதேபோன்று, என்னிடம் பேசி இந்த ஈரோடு மாவட்டத்திற்குப் பல்வேறு திட்டங்களைப் பெற்று செயல்படுத்திக் காட்டியவர். எனவே, ஈரோடு மேற்கு தொகுதி மக்கள், அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் உங்களின் பொன்னான வாக்குகளை வழங்க வேண்டும் என்று நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பவானிசாகர் சட்டமன்றத் தொகுதியில் நமது வெற்றி வேட்பாளர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பி.எல். சுந்தரம் அவர்கள். முன்பே சட்டப்பேரவையில் பணியாற்றிய அனுபவம் கொண்டவர் அவர். பவானிசாகர் தொகுதி மக்களுக்கு நன்கு அறிமுகமானவர். பி.எல். சுந்தரம் அவர்களுக்கு நீங்கள் எல்லாம் கதிர் அரிவாள் சின்னத்தில் உங்களின் பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும் என்று நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த செந்தில்நாதன் அவர்கள். பொறியியல் பட்டதாரியான இவர், மக்கள் பணிகளைச் செய்யக் களம் காண்கிறார். கூட்டணிக் கட்சி வேட்பாளராக இருந்தாலும் நம்முடைய வெற்றிச் சின்னத்தில் நிற்கும் அவருக்கு, கழகத்தின் சார்பில் இருக்கும் நண்பர்கள் கடுமையாகக் களப்பணி ஆற்ற வேண்டும். செந்தில்நாதன் அவர்களுக்கு, மொடக்குறிச்சி மக்கள் உதயசூரியன் சின்னத்தில் உங்களின் பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும் என்று நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பெருந்துறை சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் மாவட்டப் பொறுப்பாளர் தோப்பு வெங்கடாசலம் அவர்கள். இவரது பெயரையே பெருந்துறை வெங்கடாசலம் என்று சொல்லும் அளவிற்குத் தொகுதி மக்களோடு இரண்டறக் கலந்தவர். பெருந்துறை தொகுதி மக்கள் தோப்பு வெங்கடாசலம் அவர்களுக்கு, உதயசூரியன் சின்னத்தில் உங்களின் வாக்குகளை அளித்து வெற்றி பெற வைக்க வேண்டும் என்று நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் எம். சிவபாலன் அவர்கள். ஒன்றியக் கழகச் செயலாளராகச் சிறப்பாகச் செயல்படக் கூடிய ஒரு நல்ல இளைஞர். அந்தியூர் தொகுதி மக்களுக்காகப் பணியாற்ற உங்களிடம் நிற்கிறார். சிவபாலன் அவர்களுக்கு நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்தில் உங்களின் பொன்னான வாக்குகளை அளித்து வெற்றி பெற வைக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கோபிசெட்டிபாளையம் சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் மாவட்டச் செயலாளர் என். நல்லசிவம் அவர்கள். நான் இளைஞரணியின் செயலாளராக பொறுப்பேற்றுப் பணியாற்றிய நேரத்தில், இளைஞரணியில் இருந்து கழகப் பணியைத் தொடங்கி, இன்றைக்கு மாவட்டச் செயலாளராக அவர் உயர்ந்திருக்கிறார். தொகுதி மக்களுக்கு நன்றாக பணி செய்ய நல்லசிவம் நிற்கிறார். அவருக்கு கோபிசெட்டிபாளையம் மக்கள் உதயசூரியன் சின்னத்தில் ஆதரித்து அவரைப் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும்.

அடுத்து, பவானி சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் கே.ஏ. சந்திரசேகர் அவர்கள். ஒன்றியச் செயலாளராக இருந்து கழகத்தை வளர்ப்பவர். இப்போது பவானி தொகுதியை வளர்க்க உங்கள் ஆதரவைக் கோரி நிற்கிறார். அவரையும் நீங்கள் உதயசூரியன் சின்னத்தில் ஆதரவளித்து வெற்றி பெற வைக்க வேண்டும் என்று நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் மூத்த தலைவர் மறைந்த அண்ணன் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களும், அவரது அன்பு மகன் திருமகன் ஈ.வே.ரா.வும் நின்று வென்ற தொகுதி. விரைவில், நம்முடைய அருமைச் சகோதரர் ராகுல் காந்தி அவர்கள் வேட்பாளர் பெயரை அறிவிக்க இருக்கிறார். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அந்த வேட்பாளருக்கு, கை சின்னத்தில் உங்களின் பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும் என்று நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, நம்முடைய அமைச்சராக இருக்கும் சாமிநாதன் அவர்கள், காங்கேயம் தொகுதியில் உதயசூரியன் சின்னத்தில் நிற்கிறார். அவருக்கும் நீங்கள் ஆதரவு தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மாவட்டத்தில் நிற்கும் 9 வேட்பாளர்களை நீங்கள் சட்டமன்றத்திற்கு அனுப்ப தயாராகிவிட்டீர்களா? நன்றி!

உங்களால் உருவாக்கப்பட்ட இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அன்போடும் உரிமையோடும் உங்களிடத்தில் கேட்டுக் கொள்கிறேன். வெற்றி உறுதியா? வெற்றி உறுதி. வேட்பாளர்கள் உட்காரலாம்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## பழனிசாமி பொறாமையில் பொய்யையும் புரளியையும் பரப்புகிறார்!